DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 39/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | காசிராமன் |
| Father / Husband Name | முனியன் என்கிற முனுசாமி |
| Village | செய்யாறு |
| Taluk | திருவண்ணாமலை |
| Age | 36 |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது செய்யாரில் வசித்து பூட்டு சாவி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன பிரியதர்ஷினி எனது மனைவி ஆவார். காயம்பட்ட தன்சிகா ஸ்ரீ எனது மகள் ஆவார். கடந்த 28.06.2024 ம் தேதி இரவு 8.45 முதல் 9.00 மணிக்குள் நான் எனது மனைவி மற்றும் எனது மகள் ஆகியோர் எனக்கு சொந்தமான TN 25 BV 0480 என்ற இரு சக்கர வாகனத்தில் அச்சிறுபாக்கத்தில் எனது மகளுக்கு தடுப்பூசி போட்டுவிட்டு செய்யாருக்கு போகும் போது வேலாமூர் கூட்ரோடு அருகே சென்றபோது எனக்கு பின்னால் வேகமாகவும் அஜாக்கிரதையாகுவம் வந்த TN 18 BM 9343 என்ற பதிவெண் கொண்ட இனோவா கார் நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டு விபத்தில் நாங்கள் தூக்கி எறியப்பட்டு எனது மனைவியை அந்த இனோவா கார் சுமார் 30 அடி தூரம் இழுத்து சென்றது. அந்த விபத்தில் எனக்கு வலது கணுகாலில் எலும்பு முறிவும் முதுகு மற்றும் தலையில் காயமும் ஏற்பட்டது. என் மனைவிக்கு பிறப்புருப்பில் இருந்து ரத்தம் நிற்காமல் வந்துகொண்டிருந்தது. என் மகளுக்கு இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு மற்றும் தலையில் அடிப்பட்டிருந்தது. ஆஜர் எதிரிதான் மேற்படி இனோவா காரை ஓட்டிவந்த நபர் ஆவார். காயம் பட்ட நாங்கள் அனைவரும் மேல்மருவத்தூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று பின்னர் மேல் சிகிச்சைக்காக SRM மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது மனைவி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது மகளை மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு குழந்தைகள் மருத்துவமனையில் சேர்த்தேன். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். நான் எனது மனைவிக்கு இறுதி சடங்கு செய்வதற்காக சிகிச்சையில் இருந்து வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** மேல்மருவத்தூர் மருத்துவமனையில் முதல் உதவி அளித்த பின்னர் எங்களை மேல் சிகிச்சைக்காக SRM மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்களா என்றால் ஆமாம். நான் மேல்மருவத்தூர் மருத்துவமனையில் இருந்தபோது மயக்க நிலையில் இருந்தேன். நான் எத்தனை நாள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் விபத்திற்கு மறுநாள் எனது மனைவி இறந்துவிட்டதால் நான் என் மனைவி பிரேதத்தை செங்கல்பட்டு அரசு

M. Thi Ravos

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததால் நான் ஒருவரின் உதவியுடன் மேற்படி மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எனது மகள் நான் SRM மருத்துவமனையில் போலிசார் விசாரிக்கும் போது எனக்கு தகவல் சொல்லும் மனநிலையில் இல்லை என்பதால் என்னை மீண்டும் சென்னை குழந்தைகள் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. நான் பயணம் செய்த சாலை வாகனங்கள் போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. இராமாபுரமும் பகுதிக்கு முன்னரே வேலாமூர் கூட்ரோடு பகுதி உள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்த நேரத்தில் சம்பவயிடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் கூட்டம் இருந்தது. எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று சரியாக தெரியாது. அச்சிறுபாக்கத்தில் எனது மகளுக்கு தடுப்பூசி போடுவதற்காக சென்ற விவரத்தையும் ஆஜர் எதிரிதான் இணோவா காரை ஓட்டி வந்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அசா1 ஐ மட்டும் தெரியும். பட்டியல் சாட்சிகள் 3 முதல் 6 வரையானவர்களை எனக்கு தெரியாது. விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்பதால் பின்னால் வந்த வாகனங்கள் எனக்கு தெரியாது என்றால் எனது இருசக்கர வாகனத்தின் side mirror ன் வெளிச்சத்தை கண்டு தெரிந்து கொண்டேன். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசார் அது குறித்து கேட்காததால் நான் சொல்லவில்லை. நான் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் நான் உண்மையில் பார்த்திருந்தால் மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நானும் எனது மனைவியும் தலைக்கவசம் அணிந்து பயணம் செய்தோமா என்றால் இல்லை. அச்சிறுபாக்கத்தில் இருந்து செய்யாருக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 கிமீ தூரம் இருக்கும்.

4. அச்சிறுபாக்கத்தில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கிமீ தூரத்திற்குள் இருக்கும். நான் சாலைவிதிகளை பின்பற்றாமல் வீட்டிற்கு செல்லும் அவசரத்தில் இடதுபுறம் செல்லாமல் சாலையின் வலது புறமாக சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் ஓட்டி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் முன்புறம் சாலையை கவனித்து ஓட்டிவந்திருந்தால் எனக்கு பின்னால் வந்த வாகனத்தை கவனித்து இருக்க முடியாது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றாலும் சம்பவதினத்தன்று நான் அச்சிறுபாக்கம் செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

M. Thi Rama

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

25/11/25

Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 39/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Father / Husband Name | அமிர்தலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கிளியாநகரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி அன்பழகனை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 11.00 மணிக்கு மேல் நான் வேலைக்கு சென்று விட்டு வரும்போது வேலாமூர் புத்துக்கோவில் அருகே போலிசார் விசாரித்து வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** போலிசார் புத்துக்கோவில் அருகே என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வேலாமூர் கூட்ரோடிற்கும் புத்துக்கோவிலுக்கும் இடையில் உள்ள இடத்தில் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி இடம் குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டிய பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரிதான். நான் வேறொரு தாளில் கையொப்பம் செய்தேன். என்னுடன் வேறு எவரேனும் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. மேற்படி சாலை நான் அடிக்கடி சென்று வரும் சாலை என்பதால் எனக்கு பரிட்சயமான இடம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் இருந்த விவரங்களை என்னால் முழுமையாக சொல்ல முடியுமா என்றால் முடியாது. போலிசார் கேட்டுக்கொண்டதால் தான் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(signature)

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
(signature) 25/11/25
Judicial Magistrate No.II
Madurantakam

DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 39/2025
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஏழுமலை |
| Father / Husband Name | குப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **25.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கீழாமூரில் வசித்து நாடக கலைஞராக இருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 1 வருடத்திற்கு மேலாக இரவு 10.30 மணிக்கு மேல் நான் சாப்பாடு வாங்குவதற்காக ராமாபுரத்தில் உள்ள ஓட்டலுக்கு வரும்போது வேலாமூர் கூட்ரோடு அருகே போலிசார் கூட்டமாக இருந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். என்னை போலிசார் மடக்கி எனது பெயர் மற்றும் முகவரியை கேட்டார்கள். மேற்படி இடத்தில் விபத்து நடந்ததாக என்னிடம் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து குறித்து நேரடியாக தெரியாது என்றாலும் போலிசார் சொல்லி தான் விபத்து பற்றி தெரியும் என்றாலும் சரிதான். ராமாபுரம் ஊருக்கு முன்னரே வேலாமூர் கூட்ரோடு சாலை அமைந்துள்ளது என்றால் ஆமாம்.

SL. Ezhumalai

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
25/11/25
Judicial Magistrate No.II
Madurantakam